## எட்டாவது

# மணிபல்லவத்துத்துயருற்றகாதை.

[எட்டாவது மணிமேகலை
மணிபல்லவத்துத்துயிலெழுந்து துயருற்றபாட்டு.]

ஈங்கிவ ளின்னண மாக விருங்கடல்
வாங்குதிரை யுடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீ ரடைகரைச் சங்குழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமர முருட்டுந் திரையுலாப் பரப்பின்
ஞாழ லோங்கிய தாழ்கண் ணசும்பி
ஆம்பலுங் குவளையுந் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி
முடக்காற் புன்னையு மடற்பூந் தாழையும்
வெயில்வர வொழித்த பயில்பூம் பந்த
அறல்விளங்கு நிலாமண னறுமலர்ப் பள்ளித்
துஞ்ச துயிலெழூஉ மஞ்சி லோதி

---

க. இவள் - சுதமதி. 'ஈங்கிவ ரிங்ஙன மாக' என்றும் பாடம்.

௩. அடைகரையில். தொடுப்பு - விதைப்பு; "தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய" என்பது மதுரைக்காஞ்சி, ௧௧; "தொடுப்பே ருழவ ரோதைப் பாணியும்" என்பது சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை, ௨௩௦.

௩ - ௪. அடைகரையாகிய கழனியிலென்றுமாம்.

௫. விரைமரம் - சந்தனம் அகில் முதலியன; "விரைமர மென்றுகில்" என்பர் மேலும்; ௧௬ - ம் காதை, ௧௨௨; "வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்" என்பது சிறுபாணாற்றுப்படை, ௧௫௫.

௬. ஞாழல் - புலிநகக்கொன்றை; "பொன்னுறு ஞாழற் பூவுடன் கடுக்கும், பேழ்வாய்ப் புலியுகிர்" என்பது கல்லாடம், ௫௨. அசும்பு - சேறு; "வாரசும் பொழுகு முன்றில்" என்பது புறநானூறு, ௧௧௪.

௭. மயங்கி - கலந்து.

௮. குண்டு நீர் இலஞ்சி - ஆழமான நீரையுடைய பொய்கைக்கரை; இலஞ்சி - ஆகு பெயர்.

௯. முடம் - வளைவு.

௧௦. பந்தர் - நிழல்.

௯ - ௧௦. புன்னையும் தாழையும் வெயிலின் வரவை யொழித்த பந்தர்.

௧௧. அறல் - நீர் அரித்து ஒழுகுதலாலுண்டாவது; "மட்டற னல்யாற்று" என்பது புறநானூறு, ௧௭௭. நிலாமணல் - நிலாவைப் போன்ற வெள்ளிய மணல். மலர் - உதிர்ந்து கிடப்பன; மலர்ப்பள்ளி - மலரானாகிய படுக்கையில். 'துறல்விளங்கு நிலாமணற் றூமலர்ப் பள்ளி' என்றும் பாடம்.

௧௨. அஞ்சிலோதி - அழகிய சிலவா

காதற் சுற்ற மறந்து கடைகொள
வேறிடத்துப் பிறந்த வுயிரே போன்று
பண்டறி கிளையொடு பதியுங் காணாள்
கண்டறி யாதன கண்ணிற் காணா
நீலமாக்கட னெட்டிடை யன்றியுங்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப
வுவவன மருங்கினி லோரிடங் கொல்லிது
சுதமதி யொளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ வென்பதை யறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கு
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ
விஞ்சையிற் றோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சஞ் செய்தனள் கொல்லோ வறியே
னொருதனி யஞ்சுவென் றிருவே வாவெனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையு
மெழுந்துவீழ் சில்லையு மொடுங்குசிறை முழுவலு
மன்னச் சேவ லரச னாகப்
பன்னிறப் புள்ளினம் பரந்தொருங் கீண்டிப்
பாசறை மன்னர் பாடி போல

னமயிரினையுடையாள்; "அஞ்சி லோதி யரசனுக் கொருநாள்" என்பர் மேலும்; உ௩-ம் காதை, உ௪; "அஞ்சி லோதி யசையல்" என்பது குறிஞ்சிப்பாட்டு, ௧அ0.

௧ - ௧உ. மணிபல்லவத்திற் கரையிற் கழனியிற் பரப்பில் இலஞ்சிக் கரையில் மணலிற் பள்ளியில் துயிலெழுந்த மணிமேகலை யென்க.

௧௩. கடைகொள - முடிவுகொள்ள.

௧௫. காணாள் - காணாளாகி.

௧௬. கண்டறியாதனவற்றை. காணா - கண்டு.

௧எ. நெட்டிடை - நெடிய இடம்.

௧அ. 'கால ஞாயிறு' என்றும் பாடம்.

௧௯. 'உவவனம்' என்பது முதல் மணிமேகலை கூற்று.

உ0. சுதமதி - விளி.

உ௧. இந்தநிலை நனவோ கனவோ.

உ௩. மயங்கும் - மயங்குவாள்.

உ௪. மெல்லிய வளையினையுடையாய்; வல்வளையுமாம்.

உ௫. விஞ்சையிற் றோன்றிய - வித்தையினாலே தோன்றிய.

உஎ. ஒருதனி - ஒப்பற்றதனிமையை. வாவென - வாவென்று சொல்லிக்கொண்டு.

உஅ - உ௯. அலையில் தவழ்ந்துசெல்லும் பறவைமுதலிய நீர்வாழ் பறவைச் சாதிகள் நான்கும்.

உ௯. 'ஒடுங்கு சிறை முழவலும்' என்றும், 'ஒடுங்குசிறை மூயும்' என்றும் பாடம்.

௩௧. 'பன்னிறப் புள்ளும்' என்றும் பாடம்.

உஅ - ௩௧. திரைதவழ்பறவைமுதலியனவாகிய பன்னிறப் புள்ளினம்.

௩உ. போர்குறித்துவந்து படைவீடுகளில் விட்ட பகையரசரிருவருடைய படைகளிரண்டும் எதிரெதிரிருத்தல் போல. பாடி - படைவீடு.

வீசுநீர்ப் பரப்பி னெதிரெதி ரிருக்குந்
துறையுந் துறைசூழ் நெடுமணற் குன்றமும்
யாங்கணுந் திரிவோள் பாங்கினங் காணாள்
குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
வரற்றினள் கூஉ யழுதன ளேங்கி
வீழ்துய ரெய்திய விழுமக் கிளவியிற்
றாழ்துய ருறுவோ டந்தையை யுள்ளி
யெம்மி திற் படுத்தும் வெவ்வினை யுருப்பக்
கோற்றொடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவா ளுழந்த மணிப்பூ ணகலத்
தையா வோவென் றழுவோண் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
யுரைபெறு மும்முழ நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி

௩௩. 'எதிரெதிர் நிற்கும்' என்றும் பாடம்.

௨௮ - ௩௪. திரைதவழ்பறவை முதலி யன, அன்னச்சேவல் அரசனாக நீர்ப்பரப்பில் எதிரெதிரிருக்குந் துறையென்க. இப்படியே, "கம்புட் கோழியுங் கனைகுர னாரையுஞ், செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங், கானக் கோழியு நீர்நிறக் காக்கையு, முள்ளு மூரலும் புள்ளும் புதாவும், வெல்போர் வேந்தர் முனையிடம் போலப், பல்வேறு குழூஉக் குரல் பரந்தவோதையும்" என்றார் சிலப்பதிகாரத்தும்; நாடுகாண்காதை, ௧௧௪ - ௧௧௯.

௩௪ - ௩௫. துறையும் குன்றமுமாகிய யாங்கணும். திரிவோள் - மணிமேகலை. பாங்கினம்-பக்கத்திலுள்ள இனங்களை.

௨௭ - ௩௫. திருவே வாவெனத் திரிவோள்.

௩௬. குரற்றலைக் கூந்தல் - பூங்கொத்தை இடத்தேயுடைய கூந்தல்; "குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்தி" என்பது சிலப்பதிகாரம், ஊர்காண் காதை, ௮௭; "குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ" என்பது சிலப்பதிகாரம், வரந்தருகாதை, ௩௮.

௩௭. கூஉய் - கூவி.

௩௮. விழுமக்கிளவியின்-துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்களால்.

௩௯. தந்தையையுள்ளி - கோவலனை நினைந்து.

௪௦. எம்மி திற்படுத்தும் வெவ்வினை - எம்மை இத்துன்பத்தினிடத்தே அகப்படுத்தும் வெவ்விய வினை; "என்னி திற் படுத்த வேந்தல்" என்பது சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், ௨௨௧. உருப்ப - முதிர; "ஊழ்வினை யுருத்தென" என்பது சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, ௨௧௭; கோபிக்க வென்றுமாம். 'எம்மிகற்படுத்தும்' என்றும் 'எம்மிதற் படுத்தும்' என்றும்பாடம்.

௪௧. கோற்றொடிமாதர் - கண்ணகி. வேற்றுநாடு - பாண்டிநாடு.

௪௨. வைவா ளுழந்த - கூரியவாளால் வெட்டுண்டு வருந்திய. அகலம் - மார்பு.

௪௫. நிலமிசை மும்முழமோங்கி.

௪௬. ஒன்பான்முழம் - ஒன்பதுமுழம்.

௪௭. விதிமாண் - விதி மாட்சிமைப் பட்ட, ஆடியின் வட்டங்குயின்று - பளிங்கினால் வட்டஞ் செய்யப்பட்டு. 'வட்டணை குயின்று' என்றும் பாடம்.

௪௮. பதுமத்தையுடையசதுரம்; பது

யறவோற் கமைந்த வாசன மென்றே
நறுமல ரல்லது பிறமரஞ் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி னாகநா டாளு
மிருவர் மன்னவ ரொருவழித் தோன்றி
யெமதீ தென்றே யெடுக்க லாற்றார்
தமபெரும் பற்று நீங்கலு நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநா
ளிருஞ்செரு வொழிமி னெமதீ தென்றே
பெருந்தவ முனிவ னிருந்தற முரைக்கும்

---

மமென்றதற்குப் புத்தனுடைய பாதங்க ளெனினும் பொருந்தும். மீமிசை - மேற்பட்ட இடம்.

சக. அறவோற்கு -புத்தனுக்கு.

சச - சகூ. சிறந்து பரப்பி ஓங்கி அகன்று குயின்று விளங்கி அமைந்த ஆசனமென்க.

ருo. பிற - பிறவற்றை. மரங்கள் நறுமலரையே சொரியும்.

ருக. பறவையும் அப்பீடிகையின் பக்கத்திற்சென்று சிறையொலியைச் செய்யாது. 'பாங்குசென் றுதிராது' என்றும் பாடம்.

ருங. பிறப்பு விளங்கு ஆசனம் - காண்போருடைய பழம்பிறப்புக்கள் அவர்களுக்கு விளங்குதற்குக் காரணமாகிய ஆசனம்.

ருச. கீழ்நிலம் - கீழ்த்திசையிலுள்ள இடம். நாகரென்னும் ஒருவகை மனிதர் வாழுநாடு நாகநாடென்பர்; இந்நாட்டின் பெயர், "நாகநன் னாட்டு நானூறி யோசனை" (கூ - ம் காதை, உக) எனவும், "நாக நாடு நடுக்கின் றாள்பவன்" (உச-ம் காதை, ருச) எனவும், "நாக நன்னா டாள்வோன்" (உரு - ம் காதை, கஎஅ) எனவும், "நாகநா டாள்வோன்" (உகூ - ம் காதை, ரு) எனவும் இந்நூலுள்ளே பின்பு வருதல் காண்க. நாக இலச்சினையை (=பாம்பின் அடையாளத்தை) யுடைமையின், இவர்களுக்கு இப்பெயரும் நாகரென்ற பெயரும் வந்தனவென்று ஊகிக்கின்றனர்.

ருசு. எடுக்கல் ஆற்றார் - எடுக்கும் வன்மை இலராய்.

ருஎ. தம பெரும்பற்று - தம்முடைய பெரிய விருப்பம், நீங்கலு நீங்கார் - நீங்குதலையும் செய்யார்; "சுழலலுஞ் சுழலு, மோடலு மோடு மொருசிறை யொதுங்கி, நீடலு நீடும்" என்றார் முன்னும்; ரு - ம் காதை, கககூ - ககரு; "கறைமிடறணியலு மணிந்தன் றக்கறை" என்பது புறநானூறு, க.

ருஅ. நெஞ்சு புகையுயிர்த்து - மனங்கொதித்து; "வஞ்சினஞ் சாற்றி நெஞ்சுபுகை யுயிர்த்து" என்பர் மேலும்; கஅ - ம் காதை, ரூஎ; "ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே" என்றார் சிலப்பதிகாரத்தும்; துன்பமாலை.

சுக. பெருந்தவ முனிவன் - புத்தன்; பொறிகளை யடக்கி நெடுநாள் மிக்க நியமத்தோடிருந்து அரியதவஞ்செய்தது பற்றி இவனைப் பெருந்தவ முனிவனென்றார்; "ஆதிசான் முனிவ னறவழி" (எ - ம் காதை, ககூ) எனவும், "பொது வறி விகழ்ந்து புலமுறு மாதவன்" (கo-ம் காதை, அச) எனவும், "போதி மாதவன் பூமியிற் றோன்றும்" (கரு - ம் காதை, உகூ) எனவும், "பிணிப்பறு மாதவன் பீடிகை" (உரு - ம் காதை, ரூச) எனவும் இந்நூலுள்ளே வருதல் காண்க; "பெர

பொருவறு சிறப்பிற் புரையோ ரேத்துந்
தரும பீடிகை தோன்றிய தாங்கென.

மணிபல்லவத்துத்துயருற்றகாதை முற்றிற்று.

---

ருந்து போதியி, லிருந்த மாதவர், திருந்து சேவடி, மருந்து மாகுமே" எனவும், "காமருபூம் போதி,யேரார் முனிவரா" எனவும், "பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி, மாதவனீ" எனவும், "மாதவரின் மாதவனீ வானவருள் வானவனீ" எனவும், "மருளறுத்த பெரும்போதி மாதவனைக் கண்டிலமால்" எனவும் வருவன முறையே வீரசோழியத்தின் யாப்புப்படலத்துள்ள ௫, ௧௧, ௧௫-ம் கலித்துறை யுதாரணங்கள். 'பெருந்தகை முதல்வன்' என்றும் பாடம்.

௬௨. புரையோர் - ஈண்டுப் பௌத்தரில் உயர்ந்தோர்; "புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை" (௨௧-ம் காதை, அ௫) எனவும், "அரசவீற் றிருந்து புரையோர்ப் பேணி" (௨௫-ம் காதை, அ௪) எனவும், "புரையோர் தாமும் பூம்பொழி லிழிந்து" (௨அ-ம் காதை, ௧௧௨) எனவும் பின்னர் வருதல் காண்க.

௫௨-௬௫. மாமணிப் பீடிகை, அறத்தகையாசனம், தருமபீடிகை அது தோன்றியது.

௭௫-௬௫. அழுவோள்முன்னர்த் தோன்றிய தென்க.

௫௪-௬௫. இவ்வடிகளிற்கூறிய வண்ணமே "வேகவெந்திற ஞ்கநாட்டரசர், சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங், கறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப், பிறவிப்பிணி மருத்துவ னிருந்தற முரைக்குந், திருந்தொளி யாசனம்" என்று பின்னுங்கூறுவர்; ௧௧-ம் காதை, ௫அ-௬௨.

௧-௬௫. இவள் இன்னணமாக, மணிபல்லவத்திடைத் துயிலெழும் அஞ்சிலோதி, போன்று காணாளாய்க் கண்டு, திருவே வாவென்று அழுவோள்முன்னர்த் தருமபீடிகை ஆங்குத் தோன்றிய தென்க.

உ

கணபதி துணை.

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய

மதுரைக்

# கூலவாணிகன்சாத்தனார்

அருளிச்செய்த

# மணிமேகலை மூலமும்

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ்

தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரெழுதிய

அரும்பதவுரையும்.

---

இவை

பாலவனத்தம் ஜமீந்தாரவர்களாகிய

இராமநாதபுரம்

ம-ள-ள-ஸ்ரீ

**பாண்டித்துரைத்தேவரவர்கள்**

உதவியைக்கொண்டு,

ஷை சாமிநாதையரால்

சென்னை:

வே. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

---

1898.

விலை ரூபா ரு.

*(Copy-Right Registered.)*